இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

# இலங்கை பொலிஸ்

# விலை மனுக்கோரல் (IFB)

## இலங்கை பொலிஸ் பிரிவிற்கு 750 எண்ணிக்கையிலான 250CC மோட்டார் சைக்கிள்கள் கொள்முதல்

## கேள்விமனு இல.: MPS/03/PB/PR/07/54/2025

1. **இலங்கை, 18வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்லயில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பராளுமன்ற அலுவல்கள் அமைச்சின்** உயர் மட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால் (HLPC), **இலங்கை பொலிஸ் பிரிவிற்கு 750 எண்ணிக்கையிலான** 250CC **மோட்டார் சைக்கிள்களை கொள்முதல் செய்வதற்கு** தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

2. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறும் (NCB), (ஒற்றை நிலை ஒற்றை உறை ஏல நடைமுறை)

3. கொள்முதலுக்கான நேர அட்டவணை :

| ஒப்பந்தத்தின் பெயர் | செல்லுபடியாகும் மனு ஆவணக் கட்டணம் | மீள்ச் செலுத்தப்படும் ஆவணக் கட்டணம் | மனு முடிவடையும் திகதி | முன் மனுக்கூட்டத்தின் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 750 எண்ணிக்கையிலான 250CC மோட்டார் சைக்கிள்களை கொள்முதல் | ரூ.9,000,000.00 | ரூ. 86,000.00 | 2026.01.12 14.00 மணிக்கு | 2025.12.29 ஆம் திகதி 11.00 மணிக்கு 17வது மாடி, சுஹுருபாய, பத்தரமுல்லயில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும். |

4. இதற்காக ஆர்வமுள்ள தகுதி பெற்ற மனுதாரர்கள் மேலதிக விபரங்களை, **17வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தலைமை கணக்காளர்களிடம் தொ.பேசி.இல : 011 2887697** மின்னஞ்சல் : mops.procurementunit@gmail.com மூலமாக பெற்றுக்கொள்ள முடிவதுடன், பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வேளை நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** மணிவரையான காலப்பகுதியில் **17வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை எனும் முகவரியில் காணப்படும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிப் பிரிவில்** அல்லது **(www.pubsec.gov.lk)** எனும் எமது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி பரீட்சித்துக்கொள்ள முடியும்.

5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **17வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்லயில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தலைமை கணக்காளரிடம் 2025.12.19** ஆம் திகதியிலிருந்து **2026.01.09** ஆம் திகதி வரை **மு.ப.09.00** முதல் **பி.ப.03.00** மணிவரை எழுத்துப்பூர்வ கோரிக்கையொன்றினை சமர்ப்பித்து மீளச்செலுத்தப்படாத ஆவணக்கட்டணத்தைச் பணமாக செலுத்துவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணபத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

6. அனைத்து மனுக்களும், இலங்கையில் இயங்கும் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியால் வழங்கப்பட்ட **2026.06.07 ஆம் திகதி** வரை செல்லுபடியாகும் **ரூ.9,000,000.00 (ஒன்பது மில்லியன் ரூபாய்)** பெறுமதியான மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும், மேலும் மனுக்கள் **2026.05.10** ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

7. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசாங்க பொது ஒப்பந்தச் சட்டத்தின்படி, மனுதாரர், முகவர், துணை முகவர் அல்லது மனுதாரர் சார்பாகச் செயல்படும் எந்தவொரு நியமிக்கப்பட்ட நபரும் தேவையான பதிவை முறையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. மனுக்கள் **2026.01.12 ஆம் திகதி பி.ப.14.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **நிதிப் பிரிவு, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, 17வது மாடி, “சுஹுருபாய”, பத்தரமுல்ல, இலங்கை** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடல் வேண்டும். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடன் அதே முகவரியில் நேரில் கலந்துகொள்ள விரும்பும் மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் உடனடியாக திறக்கப்படும்.

**தலைவர்,**
**உயர் மட்ட கொள்முதல் குழு (HLPC),**
**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**
**18வது மாடி, “சுஹுருபாய”, பத்தரமுல்ல, இலங்கை.**
**2025.12.19**

SELACINE